Kalanjiyam International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.76
https://ngmtamil.in/

# பண்டைய காலத்தில் வழிபாட்டு முறைகள்

**முனைவர் கோ.மாலினி,**

உதவிப் பேராசிரியர், தட்சசீலா பல்கலைக்கழகம், ஓங்கூர், திண்டிவனம், தமிழ்நாடு -604305

**முன்னுரை**

பண்டைய காலத்தில் வழிபாடு பற்றியும் ,எந்த எந்த பொருட்களைத் தெய்வமாக வழிபட்டனர் என்பதற்கான சான்றாக சங்க இலக்கியப் பாடல்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் சிலப்பதிகாரம் என்ற காப்பியத்தில் வழிபாடு பற்றிய செய்திகள் மேற்கோளாக காட்டப்பட்டுள்ளன அந்த வகையில் வழிபாட்டு முறைகள் என்ற தலைப்பில் வழிபாடு எப்போது தோன்றியது எதற்காக தோன்றியது என்பதற்கான காரணங்களும் கூறப்பட்டுள்ளன.

**இயற்கை வழிபாடு:**

இயற்கை வழிபாடே உருவமுடைய இறை வழிபாட்டிற்கு அடிப்படையாய் அமைந்தது. இயற்கை வழிபாடானது நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், மலை, ஞாயிறு, திங்கள் போன்ற இயற்கை பொருட்களை வழிபடுவதாகும். பண்டைய மக்கள் இயற்கையின் தோற்றங்களான ஞாயிறு (சூரியன்), திங்கள் (சந்திரன்), நெருப்பு ஆகிய மூன்றினையும் வழிபாடு செய்துள்ளனர்.

கதிரவனை ஆண் தெய்வமாகவும், திங்களைப் பெண் தெய்வமாகவும் வழிபட்டு வந்துள்ளனர். குறிஞ்சி நிலப் பெண்கள் மலையை வணங்கியுள்ளனர். நலன் பெருகவும், நன்றிக்கடன் செலுத்தவும் இயற்கையை வணங்க ஆரம்பித்தார்கள். கதிரவன்வழிபாடும் மாரி வழிபாடும், விண் வழிபாடும், மண் வழிபாடும் இப்படித்தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் கூற்று. (திருக்கோயில் வழிபாடும் வழிபாட்டுப் பாடல்களும் ப.40)

**மருவு சந்தியும் மறுகுகூடு சதுக்கமும்**
**மன்றில் பொதியிலில் கந்துடை நிலையினும்**
**யாழினும் பிறவினும் எங்கனும் மன்னி**
**உவந்துறை கடவுளர் காட்சியும் உளவே.**

என்ற பாடலில் பழந்தமிழர் வழிபடுவதற்குரிய இடங்களைப் பதிவு செய்கிறார் மு. சண்முகம்பிள்ளை. (சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்.ப.112)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மக்கள் வாழும் வீட்டிலும் இல்லுறை தெய்வங்கள் சில இடம்பெறுகின்றன. ஊர்களில் உள்ள தெருச்சந்திகள், மன்றங்கள், பொதுச்சபையிடங்கள் இவற்றிலும் தெய்வங்கள் குடிகொண்டுள்ளன" என்பதும் சண்முகம் பிள்ளையின் கருத்து.

**காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**

**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்**

**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் (திருமுரு 223 226)**

என்ற திருமுருகாற்றுப்படையின் பாடலடிகளும் தெய்வம் குடிகொண்டுள்ள இடங்களைப் (முருகன் எழுந்தருளும் இடங்களாகப்) பட்டியலிடுகையில்,

**மரவழிபாடு:**

காட்டிலும், சோலையிலும், அழகுடைய ஆற்றின் தீவிலும், ஆறுகளிலும் (ஆற்றின் கரையிலும்), குளங்களிலும் (குளத்தின் கரையிலும்), வேறு பல இடங்களிலும், நாற் கூட்டிடங்களிலும் (நாற் சந்தியிலும்), முக்கூட்டிடங்களிலும் (முச்சந்தியிலும்), புதிய மலர்களை உடைய கடம்ப மரத்திலும், ஊர் மன்றத்திலும் (ஊர் நடு மன்றமாகிய மரத்தடியிலும்), அம்பலத்திலும், இறைவன் குறியாக நடப்பட்ட தறியிடத்தும் (கடவுளாகக் கருதி நட்டு நிறுத்திய கல்தறியிலும்) தெய்வம் உறைவதாகச் சுட்டுகிறது.

**விடை அரை அசைத்த வேலன் கடிமரம் பரவினர் உரையொடு பண்ணிய இசையினர் (பரிபா. 17:3-4)**

என்ற பரிபாடல் 'வேலனின் சிறப்புமிக்க கடம்ப மரத்தை' வழிபட்டதை குறிப்பிடுகிறது.

**துறையும் ஆலமும் தொல் வலி மராஅமும்**

**முறை உளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ (கலித். 101:13-14)**

என்ற கலித்தொகை வரிகள் 'ஆலமரத்தின் கீழும், பழைய வலிமையினையுடைய மராமரத்தின் கீழும் உறையும் தெய்வங்களை மக்கள் அவற்றுக்குரிய முறையுடனே வணங்கினர் என்று குறிப்பிடுகின்றன.

**கடவுள் மரத்த முள் மிடை குடம்பைச் (அகநா. 270:12)**

**தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில் (அகநா. 309:4)**

என்ற அகநானூற்று வரிகள், 'தெய்வம் உறையும் மரம்' என்றும் 'தெய்வம் தங்கியுள்ள பருத்த அடிமரத்தைக் கொண்ட வேப்பமரத்தடியில்' என்றும் கூறுகின்றன.

**கடவுள் வாகைத் துய் வீ ஏய்ப்ப (பதிற். 66:15)**

என்ற பதிற்றுப்பத்து அடியில் 'வெற்றி மடந்தையாகி கடவுள் வாழும் வாகை' என்று குறிப்பிடப்படுகிறது.

**ஞாயிறு, திங்கள் வழிபாடு**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஞாயிறும், திங்களும் வழிபடு பொருள்களாக ஆனதற்குக் காரணமாக இரா. சீனிவாசன் குறிப்பிடுகையில்,

"பழங்காலத்தில் நெருப்பு கண்டுபிடிக்கப் படாமையால் மனிதன் இரவு நேரங்களில் கண் தெரியாது குகைக்குள் கிடந்து, நச்சுயிர்களுக்கும், விலங்குகளுக்கும் அஞ்சி வாழ்ந்து இரவெல்லாம் துன்புற்று காலையில் ஞாயிற்றின் ஒளி கண்டு மகிழ்வுற்றான். சில நேரங்களில் தண்ணளி நல்கும் சந்திரனையும் கண்டு பரவசமுற்று மகிழ்ச்சி அடைந்தான். இதன் பொருட்டு ஞாயிறும் திங்களும் அவனுக்கு வணக்கப் பொருள்களாகியிருக்கலாம் என்பது இரா.சீனுவாசன் கருத்து.

**திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!**

**ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்! (சிலப்.புகார். 1:4)**

என்னும் சிலப்பதிகார அடிகள் இதற்குச் சான்றாக அமைகின்றன. மேலும்,

**உச்சிகிழான் கோட்டம் ஊர்கோட்டம் வேல்கோட்டம்**
**வச்சிர கோட்டம் புறம்பணையான் வாழ் கோட்டம்**
**நிக்கந்த கோட்டம் நிலா கோட்டம் புக்கு எங்கும்**

**(சிலப். புகார். 9:11 13)**

என்ற சிலப்பதிகார அடிகளில் குறிப்பிடப்படும் 'உச்சிகிழான் கோட்டம்' என்பதும் 'நிலா கோட்டம்' என்பதும் ஞாயிறு, திங்கள் ஆகியவை கோவில் கட்டி வழிபட்டுள்ளமைக்குச் சான்றாக அமைகின்றன.

**நீர் வழிபாடு**

நீர் நிலைபெற்றுள்ள சுனை அருவி குளம் ஆறு ஆற்றுத்துருத்தி கடல், கழிமுகம் முதலியவற்றிலும் கடவுள் வாழ்வதாகப் பழங்கால மக்கள் நம்பி அதனை வழிபட்டும் வந்துள்ளனர்.

**கடவுள் கல் சுனை அடை இறந்து அவிழ்ந்த (நற். 34:1)**

என்ற நற்றிணை பாடலின் வரி, 'கடவுள் தன்மையுள்ள மலைச் சுனையில் என்று எடுத்துக் கூறுகிறது.

**ஆலமும் கடம்பும் நல் யாற்று நடுவும் (பரிபா. 4:67)**

என்ற பரிபாடல் அடியில், ஆற்றின் நடுவில் அமைந்துள்ள துருத்தி எனப்படும் திட்டுகளில் (ஆற்றிடைக் குறையில்) உறைபவன் என்கிறது.

**கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கிக்**
**கடுஞ்சூள் தருகுவன் நினக்கே கானல்(அகநா.110:45)**

என்ற அகநானூற்று வரிகள், 'கழிமுகத்துறைத் தெய்வத்தின் மேல் ஆணை' என்கிறது. ஆறு கடலொடு கலக்கும் நீர்ச்சுழிகள் நிறைந்த கழிமுகத்திலும்கூட தெய்வம் உறைகின்றது என்கிறது இப்பாடல்.

**நாக வழிபாடு:**

ஆதி மனிதன் இயற்கையைக் கண்டு பெரிதும் பயந்துள்ளான். அவற்றால் தன் உயிருக்குத் தீங்கு நேரும் என்று அஞ்சித் தன்னை ஒன்றும் செய்து விடக்கூடாது என்பதற்காக அவ்வியற்கையை வணங்கினான். மேலும், தனக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அவ்வியற்கையோடு இயைந்து வாழும் விலங்குகளான சிங்கம், புலி, யானை, பாம்பு, நாய் முதலானவற்றையும் அச்சத்தின் காரணமாக வணங்கினான். இதனால் சிறு தெய்வங்களை வணங்கும்போதே விலங்குகளையும் சேர்த்து வணங்கினான்.

**கரந்து பாம்பு ஒடுங்கும் பயம்புமார் உளவே**
**குறிக் கொண்டு மரங் கொட்டி நோக்கி**
**செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச**
**வறிது நெறிஒரீஇ வலம்செயாக் கழிமின் (மலைபடு. 199-202)**

பரலையுடைய பள்ள நிலத்தின் பரப்பிலே பாம்புகள் மறைந்து கிடக்கும் குழிகள் உள்ளன. அவற்றை மனத்தாலே குறித்துக் கொண்டு, அப்பாம்பு மனம் மகிழும்படி கையால் தொழுது வணங்கிச் செல்வீர்களாக, என்ற பாணனின் கூற்று இம்மலைபடுகடாம் அடிகளில் இடம்பெறுகிறது.

**அணங்கு வழிபாடு:**

மலை, மரம், நீர் முதலிய இயற்கைப் பொருள்களில் உறையும் தெய்வங்களும், அவ்வியற்கையோடு இயைந்து வாழும் விலங்குகளும் பெரும்பாலும் வருத்தும் தெய்வங்களாகவே இருந்துள்ளன. அச்சத்தையும் வருத்தத்தையும் தருகின்ற காரணத்தினால் இத்தெய்வங்களை ‘அணங்கு’ என்றும், ‘சூர்’ என்றும் குறிப்பிட்டுள்ளனர். அணங்கு என்பதற்கு, வருத்தம், அச்சம், ஆசை, மோகினி, அழகு, பெண், பேய்மகள், கொல்லிப்பாவை என்னும் விளக்கங்களை அகராதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**அணங்கும் சூரும் தெய்வப்பெண் பொதுப்பெயர். (திவா.நி. 27)**

**கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல் (பெரும்பாண். 494)**

‘கின்னரம் என்னும் பறவைகள் பாடும் தெய்வங்கள் உறையும் சாரலிடத்தே’ என்று பெரும்பாணாற்றுப்படையும்,

**எம் அணங்கு அன்னாளே. (அகநா. 366:16)**

‘எங்களுக்குத் தெய்வம் போன்றவளாகிய’ என்று அகநானூறும் தெய்வம் என்னும் பொருளைத் தருகின்றன.

**உருமும் சூரும் இரைதேர் அரவமும்(குறிஞ்சிப். 255)**

என்ற குறிஞ்சிப்பாட்டின் அடியில் ‘சூரும்’ என்பதற்குக் ‘கொடுந்தெய்வமும்’ என்று விளக்கம் தருகிறார் நச்சினார்க்கினியர்.

**சூர் உடை அடுக்கத்த... (நற். 359:9)**

'வருத்தும் தெய்வமிருக்கின்ற மலைச் சரிவுப்பக்கமுள்ள' என்று 'வருத்தும் தெய்வம்' என்ற பொருளை நற்றிணையும்,

இவ்வாறு வருத்தும் தெய்வ மகளிர் 'சூர்மகள்' என்றும் 'சூரரமகளிர்' என்றும் அழைக்கப்பட்டனர். இதனை,

**சூரர மகளிரோடு உற்ற சூளே (குறுந். 53:7)**

**சூரர மகளிரின் நின்றநீ மற்று**

**யாரையோ எம் அணங்கியோய்... (அகநா. 32:7-8)**

என்ற இலக்கியச் சான்றுகள் வழி அறியலாம்.

**ஆவி வழிபாடும் முன்னோர் வழிபாடும்:**

அணங்கு, சூர் முதலியன போன்றே தன்னை வருத்தும் செயல்களுக்கு ஆவிகளே காரணம் என்று பழங்கால மக்கள் நம்பினர். எனவே இறந்தவர்களின் ஆவியை வழிபட்டால் அந்த ஆவி தெய்வத்திடம் சென்று வரம் பெற்றுத் திரும்பி வந்து தங்கள் குடும்பத்தைக் காக்கும் என்று நம்பி ஆவிகளை வழிபட்டுள்ளனர். இதன் காரணமாகவே இறப்புக்குப் பின் பதினாறாவது நாள் அந்த ஆவியை வீட்டுக்கு அழைத்து வர, சாற்றுப் பாடல் பாடி வழிபாடு நடத்துகின்றனர். (இரா.சந்திரசேகரன்.நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்.ப.276) ஆவிகள் குறித்த நம்பிக்கையில் உருவானது தான் இறந்தோர் வழிபாடும், முன்னோர் வழிபாடும்.

ஆவியினத் தெய்வங்கள் பேய், பிசாசு, பூதம், பாசம், கழுது, பழு, அணங்கு, கூளி முதலிய பெயர்களைப் பெறுகின்றன.

**பானாள் கொண்ட கங்குல் இடையது**

**பேயும் அணங்கும் உருவு கொண்டு ஆய்கோல்**

**கூற்ற கொல்தேர் கழுதொடு கொட்ப (மதுரைக். 631-633)**

என்ற மதுரைக்காஞ்சியின் அடிகளில் பேய், அணங்கு, கழுது முதலியவை குறிப்பிடப்படுகின்றன**.**

**குலதெய்வ வழிபாடு**

எந்தவொரு சமூக மாற்றமோ, தனிமனித மனமாற்றமோ திடீரென நிகழ்வதில்லை. அவை பல்வேறு காலங்களில் தோன்றி வளர்ச்சிபெற்ற கருத்துகளின் கோவையாகவே நிகழ்ந்தது ஆகும். அவ்வகையில் முன்னோர் வழிபாடாக இருந்த முறை பல பரிமாணங்களின் வளர்ச்சிப் படிநிலைகளைக் கடந்து வந்து குல தெய்வ வழிபாட்டு மரபாக மாறியது. இன்றும் குலதெய்வ வழிபாடு குறிப்பிட்ட மக்களின் இறந்த முன்னோர்களின் பெயர்களைக் கொண்டு வழிபடப்படுகிறது.

நிகழ்கால வாழ்விற்கான வளமும், பாதுகாப்பும் முறையான வாழ்க்கையை அமைக்கவில்லை என்றால் முன்னோர் ஆவி தண்டிக்கும் என்ற நம்பிக்கையும் முன்னோர் வழிபாட்டிற்குக்

காரணமாகும். மேலும், குழந்தைப் பேறு இல்லாதவர்கள் "பித்ரு சாபம்" நீங்க முன்னோர் வழிபாடு செய்துள்ளனர்.

பக்தவத்சல பாரதி, முன்னோர் வழிபாட்டிற்கான நம்பிக்கையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**1.இறந்த மூதாதையரின் ஆற்றலும், அனுபவமும் வாழ்வோரைச் செழுமைப்படுத்தும்.**

**2. இறந்தோரின் ஆசி என்றென்றும் வாழ்வோர்க்குக் கிடைக்க வேண்டும்.**

**3.இறந்தோர்களின் விருப்பங்களையும் அவருக்குப் பிடித்தமானவற்றையும் நிறைவேற்றி அவர்களை வழிபடுவதன் மூலம் தீய சக்திகளிலிருந்து முன்னோர்கள் தப்பிக்க வைப்பார்கள்**.

இந்த மூன்று வகையான நம்பிக்கைகளே முன்னோர் வழிபாட்டிற்கான காரணங்களாகும் என்கிறார். (பண்பாட்டு மானிடவியல்.ப.515)

இவ்வாறு நம்பிக்கை அடிப்படையில் வழிபடப்பட்ட மூதாதையர்கள் அவர்கள் மட்டுமே அல்லது அவர்களது வம்சா வழியினர் மட்டுமே பாரம்பரியமாக வழிபட்டு வந்ததே "குலதெய்வ வழிபாடு" என்றாயிற்று.

**நடுகல் வழிபாடு:**

போர்க்களத்திற்குச் சென்ற போர்வீரன் எதிரிகளைக் கொன்று குவித்து வீரமரணம் அடைந்துவிட்டால் அவனுடைய பெயரையும், பெருமையையும் ஒரு கல்லில் எழுதி வழிதோறும் நடப்பட்டு அதற்கு மயில்தோகை சூட்டி வழிபாடு செய்துள்ளனர் என்பதை,

**நல்அமர்க் கடந்த நாண்உடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல் (அகநா. 67:8-10)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

வீரனொருவனுக்கு நடுகல் நாட்டியதுடன் அவனை மறந்துவிடவில்லை. நடுகல்லை மயிற்பீலியாலும் மாலையாலும் அலங்கரித்து, படையலாகக் கள்ளை வைத்து, உயிர்ப்பலி கொடுத்து வழிபட்டுள்ளனர். இறந்த வீரனின் ஆவி அக்கல்லில் உறைகிறது என்ற நம்பிக்கையே இந்நடுகல் வழிபாட்டிற்கான அடிப்படைக் காரணம் என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியன். (பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும்)

**முடிவுரை**

இயற்கை வழிபாடு, ஆவி வழிபாடு, முன்னோர் வழிபாடு நடுகல் வழிபாடு மற்றும் குலதெய்வ வழிபாடு குறித்த செய்திகளை சங்க இலக்கிய பாடல்கள் மூலம் இக்கட்டுரையில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வழிபாடு குறித்தும், வழிபாட்டு முறைகள் குறித்தும் அறிந்து கொள்ள முடியும் . கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

தமிழ்க் குடி அந்தக் குடியில் பிறந்த ஒவ்வொருவரும் தன்னை மீறிய சக்தி ஒன்று உள்ளதாக நம்புவதே வழிபாட்டின் சிறப்பாக அமைகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1.] 1.திருக்கோயில் வழிபாடும் வழிபாட்டுப் பாடல்களும்

[2.] 2. சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்.

[3.] 3. நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும்

[4.] 4. பண்பாட்டு மானிடவியல்

[5.] 5. சங்க இலக்கிய நூல்கள்